## மேம்பாலம், சுரங்கப்பாதை வழித்தடங்களில் உள்ள

# மெட்ரோ ரயில் நிலையங்களில் பாதுகாப்பு குறித்து ஆராயவேண்டும்

### கட்டுமான பிரிவுக்கு எம்.டி. உத்தரவு

சென்னை, அக்.6: மேம்பாலம் மற்றும் சுரங்கப் பாதை வழித்தடங்களில் உள்ள மெட்ரோ ரயில் நிலையங்களில் பாதுகாப்புகள் குறித்து உடனடியாக ஆராய வேண்டும் என்று கட்டுமான பிரிவினருக்கு மெட்ரோ ரயில் மேலாண்மை இயக்குனர் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மேம்பாலம் மற்றும் சுரங்கப் பாதை வழித்தடங்களில் மெட்ரோ ரயில் சேவையானது செயல்பட்டு வருகிறது. இதேபோல், மெட்ரோ ரயில் சேவையை தினம்தோறும் 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் பேர் வரையில் பயன்படுத்தி வருகின்றனர். உயர்தரமான சேவை, விரைவு பயணம் என்பதால் மெட்ரோ ரயில் சேவைக்கு பொதுமக்கள் மத்தியில் வரவேற்பு கிடைத்தது. ஆனால், கடந்த 3 மாதங்களாக மெட்ரோ ரயில் சேவையில் தொடர் பிரச்னை ஏற்பட்டு வருகிறது. சிக்னல் கோளாறு, தானியங்கி கதவுகள் சரியான முறையில் திறக்காதது, தொழில்நுட்ப கோளாறு என தொடர் பிரச்னைகள் ஏற்பட்டது. இந்த தொடர் பிரச்னை காரணமாக பயணிகள் கடும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர்.

இதேபோல், கடந்த மாதம் 29ம் தேதி ஷெனாய் நகர் மெட்ரோ ரயில் நிலையத்தில் ரயிலை விட்டு பெண் பயணி தனது குழந்



தையுடன் இறங்கினார். அப்போது சுரங்கப்பாதையின் மேற்கூரையில் பதிக்கப்பட்டிருந்த 'டைல்ஸ் கல்' அந்த பெண் பயணியின் தலையில் விழுந்தது. இதில் தலையில் படுகாயமடைந்த அந்த பயணி அருகில் இருந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு தலையில் 8 தையல்கள் போடப்பட்டு தொடர் சிகிச்சைக்கு பிறகு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். இது மெட்ரோ ரயில் பயணிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எனவே, மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் ரயில்களில் ஏற்படும் இதுபோன்ற பிரச்னைகளை தடுக்கும் விதமாக தற்போது அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய வேண்டும் என கட்டுமான பிரிவினருக்கு மெட்ரோ ரயில்வே மேலாண்மை இயக்குனர் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

மெட்ரோ ரயில் நிலையங்களில் கடந்த 3 மாதங்களாக பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டு வந்தது. எனவே, அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய வேண்டும். அதேபோல், பாதுகாப்பு குறைபாடுகள் எந்த மெட்ரோ நிலையங்களிலும் இருக்கக்கூடாது. அப்படி பாதுகாப்பில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அதை உடனடியாக சென்று சரிசெய்ய வேண்டும் என கட்டுமானப்பிரிவுக்கு மெட்ரோ ரயில் மேலாண்மை இயக்குனர் உத்தரவிட்டுள்ளார். மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை வழித்தடங்களில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பார்வையிட்டு அதை சரி செய்ய வேண்டும். இந்த பணியை உடனடியாக செய்து முடிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார். பயணிகள் தங்களின் குறைபாடுகள் குறித்து புகார் தெரிவித்தால் அதை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும். இவ்வாறு கூறினார்.